# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 08

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் – 03 | 16–03–2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை –0.



S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத கண்கவர் தங்க நகைகளை சுத்தமான 22 கரட் தங்கத்தில் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247 (சி-9261) 077-6059672


# நம்பிக்கைத்துரோகம் புரிந்த கருணாவை இந்த மண் ஒருபோதும் மன்னிக்கமாட்டாது

## 'பாடுமீன்' இணையத்தளச் செய்தியாளரின் குமுறல்

(மட்டக்களப்பு)

**தமிழீழத்தில் வடுவொன்றை ஏற்படுத்திய நம்பிக்கைத்துரோகி கருணாவை இந்த மண் ஒருபோதும் மன்னியாது என 'பாடுமீன்' இணையத்தளச் செய்தியாளர் அவ் இணையத்தளத்தில் செய்தி வெளியிட்டுள்ளார். மட்டக்களப்பிலிருந்து இயக்கப்படும் இந்த இணையத்தளத்திற்கு செய்திகளை வழங்கிவந்த இவர் கடந்த சில தினங்களாக பாடுமீன் இணையத்தளத்தில் வெளிவந்த செய்திகளுக்கு மன்னிப்புக்கோரி இச் செய்தியை வெளியிட்டுள்ளார்.**

அதன்விபரம் வருமாறு:-

தமிழீழக் கனவோடு கல்லறைகளில் உறங்குகின்ற எம்முடன் பிறப்புக்களை மனதில் நிறுத்தி கடந்த சில நாட்களில் இந்தப் பாடுமீன் பக்கங்கள் தாங்கிவந்த எமது தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைக்கெதிராகவும் வெளிவந்த செய்திகளிற்காக பாடுமீன் வாசகர்களிடம் பல்லாயிரம் தடவைகள் மன்னிப்புக் கேட்கின்றேன். தமிழ்த்தாயின் கழுத்தில் சுருக்கிட்டு தேசியத்தின் குரல்வளையை எப்படி இந்தக் கருணா என்ற துரோகி நெரிக்க முற்படுகிறானோ அதைவிடக் கொடுமையின் நரகத்திற்குள் இருந்து இந்தப்பாடுமீன் எழுத்தாளர் எழுதவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டான் என்பதை இருகண்ணிலும் இருந்து வருகின்ற கண்ணீர்த்துளிகள் எனது விசைப்பலகையைத் துளைத்து

(8ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டின் கைக்கூலியாகிவிட்ட கருணா புலிகளுக்குத் துரோகம் இழைத்துவிட்டார்!

## யாழ்.இல் கரிகாலன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட தளபதியாக இருந்த கருணா வெளிநாட்டின் கைக்கூலியாகி விட்டார் இதன் காரணமாகவே புலிகள் இயக்கத்திற்கும், தேசியத்தலைவருக்கும் துரோகமிழைத்துவிட்டார் இந்தத் துரோகத்தை மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட மக்கள் புரிந்து விட்டார்களென விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன் தெரிவித்தார்.

நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் தலைமையில் நடைபெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன் மற்றும் போராளிகள், பேராசிரியர்கள், மாணவர்கள், ஊடகவிய

(8ஆம் பக்கம் பார்க்க)

# போர் நிறுத்தத்தை வலுப்படுத்தல் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு

## ஐ.தே.க. தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

நடைமுறைப் போர்நிறுத்தத்தை வலுப்படுத்துதல் ஐக்கிய இலங்கைக்குள் சகல சமூகங்களுக்குமான தீர்வை உறுதி செய்தல் என்பன குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று இத்தேர்தல் விஞ்ஞாபனத்தை ஜெயவர்த்தன நிலையத்தில் வெளியிட்டுவைத்து சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார். தாம்முடிவுறுத்தப்படாத விடயங்களுக்காகவே மக்கள் ஆணையை கேட்பதாக கூறிய அவர் வலுவான போர்நிறுத்த உடன்பாடு நாட்டில் இருக்கிறது.

(8ஆம் பக்கம் பார்க்க)

# சூனிய பிரதேசத்தில் சாவடி அமைக்க சிறில.படைத் தரப்பிற்கு சம்மதமில்லை

## தேர்தல் ஆணையாளருடனான சந்திப்பில் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு யுத்த சூனியப்பிரதேசத்தில் தேர்தல் சாவடிகளை அமைப்பதற்கு சிறிலங்கா படைத்தரப்பு சம்மதம் வழங்க மறுத்துள்ளது. நேற்று இது தொடர்பாக சிறிலங்கா தேர்தல் ஆணையாளருக்கும் சிறிலங்காப் படைத் தளபதிகளுக்குமிடையே இடம் பெற்ற சந்திப்பிலேயே இவ்வாறு படைத்தரப்பு மறுத்துள்ளது.

இச்சந்திப்பின் பின்னர் வடக்குக் கிழக்கின் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் தேர்தல் வாக்களிப்பு நடத்துவது தொடர்பில் எதிர்வரும் 25ம் திகதி தேர்தல் ஆணையாளர் இறுதி முடிவை தெரிவிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. தேர்தல் வாக்களிப்புத் தொடர்பாக எதிர்வரும் 22ம் திகதி படையினரின் அறிக்கை தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

இதன் பின்னரே ஆணையாளர் இறுதி முடிவை அறிவிக்க உள்ளார்.இதுதொடர்பாகமேலும் தெரியவருகையில் நேற்று தேர்தல்

(8ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் நால்வர் கொழும்பில் கைது

அச்சிடப்பட்ட தேர்தல் சுவரொட்டிகளுடன் யாழ். குடாநாட்டிற்கு வருகை தரவிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் நால்வர் கொழும்பில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போதைய கூட்டமைப்பின் வேட்பாளருமான கே.சிவாஜிலிங்கத்தின் தனிப்பட்ட மெய்ப்பாதுகாவலர் உள்ளிட்ட நால்வரே நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

அச்சிடப்பட்ட தேர்தல் சுவரொட்டிகளை குடாநாட்டிற்கு எடுத்துவர ஏதுவாக வாகனமொன்றில் ஏற்றிவந்திருந்த இவர்கள் மருதானைப்பகுதியில் வைத்துப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (27)

# தமிழர் சுதந்திரமாக வாக்களிப்பது மறுக்கப்படின் பேச்சுவார்த்தையில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்

## -நோர்வே விசேட தூதுவரிடம் சம்பந்தன் வலியுறுத்து

(திருகோணமலை)

''விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் வாழ்கின்ற தமிழ் வாக்காளர்கள் சுதந்திரமாக,படையினரின் சோதனை மற்றும் கெடுபிடிகளின்றி வாக்களிப்பதற்கு, அனுமதி மறுக்கப்படின் அது சமாதானப் பேச்சுவார்த்தையில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்'' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகமுமான இரா.சம்பந்தன் நேற்று நோர்வே நாட்டு சிறப்புத் தூதர் எரிக் சூல்கெய்மிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது. எரிக்சூல்கெய்முடன் நோர்வே நாட்டின் இலங்கைக்கான தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் மற்றும் நோர்வே ராஜதந்திரிகள் சிலரும் பங்கு பற்றினர். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் வாழும் சுமார் 3லட்சம் தமிழ் வாக்காளர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் சுதந்திரமாக வாக்களிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுப்பதன் அவசியம் பற்றியே சம்பந்தன் விசேட தூதரிடம் வலியுறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, திருமலை

(8ஆம் பக்கம் பார்க்க)

# பௌத்த சின்னத்தை பயன்படுத்துவதற்கு எதிர்ப்பு

ஹெல உறுமய கட்சியினர், பௌத்த சின்னத்தையும், பௌத்த கொடியையும் தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்துவதை தடுக்கவேண்டும் என பௌத்திக் குமார் தேர்தல் ஆணையாளரிடம் நேற்று வேண்டு கோள் விடுத்துள்ளார்.

ஹெல உறுமயவினர் நடந்து கொள்ளும் விதம் பௌத்த மதத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதாக 15பேரைக் கொண்ட பௌத்தபிக்குகள் மகஜர் ஒன்றை தேர்தல்ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ளனர். (32)

## லெப்.சீலனின் தாயார் காலமானார்

விடுதலைப்புலிகளின் தாக்குதற் பிரிவின் முதற்தளபதி லெப். சீலனின் (சாள்ஸ் அன்ரனி) தாயார் திருமதி மரியசெபமாலை லூக்காஸ் நேற்று காலமானார்.அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வள்ளிபுனத்தில் நடைபெறும்.

# தமிழர் தேசியம் குறித்து பேசவேண்டாம்; கூட்டமைப்பு வேட்பாளருக்கு கருணா அறிவுறுத்து!

(மட்டக்களப்பு)

தமிழர் தேசியம் குறித்து தேர்தல் பிரச்சாரங்களின்போது பேச வேண்டாம் என தமிழ்க் கூட்டமைப்பு மட்டு. அம்பாறை மாவட்டங்களின் வேட்பாளர்களுக்கு கருணா நேற்று அறிவுறுத்தியுள்ளார்.

தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்களை நேற்று கருணாவின் தரப்பில் இருவர் சந்தித்துள்ளனர். இதன்போதே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

இதன்போது சில வேட்பாளர்கள் நேரடியாகவே இதற்கு மறுப்புத் தெரிவித்ததாகவும் தமிழ்த் தேசியம் குறித்து பேசாது தம்மால் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட முடியாது எனவும், அவ்வாறு வற்புறுத்தினால் தாம் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகிக் கொள் ஏப்போவதாகவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து நேற்று இடம்பெற்ற சந்திப்பில் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.இது தொடர்பாக தமது அறிவிப்பை இன்று வெளியிடுவதாக கருணா தரப்பில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வரி விளம்பரம்

### அமல் பல் மூக்குக்கண்ணாடி அகம்

கண்பரிசோதித்து நவீன பிறேங்களில் கண்ணாடி வழங்குதல், பல்கட்டுதல், பல் கிளிப் போடுதல் என்பன உடன் செய்து கொடுக்கப்படும். தொடர்புக்கு அமல் பல் மூக்குக் கண்ணாடி அகம், பரந்தன் சாலை புதுக்குடியிருப்பு. (4058)

### எட்வின் கல்வி நிலையம் முல்லை வீதி, புதுக்குடியிருப்பு

புதிய வகுப்புக்கள் ஆரம்பம். காலம்: 20-03-2004 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு. G.A.Q., A.A.T. Stage I, A/L 2005,2006 கலை, வர்த்தக, விஞ்ஞானப் பிரிவுகள். 9,10,11ஆம் ஆண்டுக்கான வகுப்புக்கள், 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் வகுப்பு. உங்கள் பதிவுகளை 19-03-2004 ஆம் திகதிக்கு முன் எமது கல்வி நிலையத்தில் பதிவு செய்து கொள்ளவும். நிர்வாகம். (4057)


# வவுனியாவில் 2200 பொலிசாருக்கு இடமாற்றம் தேர்தல் பணிகளில் இராணுவத்தை ஈடுபடப் பணிப்பு!

## -சனாதிபதியின் உத்தரவிற்கமைய நடவடிக்கை

(கொழும்பு)

வவுனியாவில் தேர்தல் கடமைகளில் சிறிலங்கா இராணுவத் தினரை அதிகமாக ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக லங்காதீப பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

வவுனியாவில் இருந்து ஒரு தொகுதி பொலிசார் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 2,200 பொலிசார் இடமாறம் செய்யப்பட்டிருப்பதாக அப்பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

இவர்களை வேறு மாவட்டங்களில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தும் பொருட்டே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். எனினும் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட பொலிசாரின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எதுவும் இடம் பெறவில்லை எனவும் தெரியவருகிறது.

இந்நிலையில் வவுனியாவில் தேர்தல் பணியில் பெரும் பகுதியை இராணுவத்தினரிடமும் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி டி.கே.மிஸ்கின் தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு என்பன ஏற்கனவே சனாதிபதியின் வசம் உள்ள நிலையில் இவ்வாறான நடவடிககைகள் பெரும் சந் தேகத்தை உண்டு பண்ணுவதாக வுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதாவது இராணுவத்தினரின் கண்காணிப்பின் கீழ் தேர்தல் சுதந்திரமாக நடைபெறுமோ என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

## நல்லூர்ப் பகுதியில் திடீர் சுற்றிவளைப்பு

யாழ். நல்லூர்ப்பகுதியை திடீரென நேற்று முன்தினம் ராணுவத்தினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியுள்ளனர். இதனால் அப்பகுதியில் பதற்ற நிலை காணப்பட்டது. இது இவ்வாறிருக்க படையினர் ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். (33)

# 14 வருடங்களின் பின் மீளக்குடியேற ஏற்பாடு

14 வருடங்களிற்குப் பின்னர் பேசாலை அகதி முகாமில் இருந்த வெள்ளாம்குளம் பகுதியிலுள்ள 03ஆம் பிட்டி கிராமமக்கள் 11பேர் தமது சொந்த இடத்தில் கடந்த சனிக்கிழமை மீளக்குடியமர அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள். இதற்கான ஏற்பாடுகளை மன்னார் பிரதேச சபைச் செயலாளர் செய்துள்ளார். இவர்களுக்கு உடனடியாக 25ஆயிரம் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவும் தொடர்ச்சியான 05மாத உலர் உணவும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


# சேரன் வாணிபம்

## பணி வேண்டுகை

சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு மேலதிக சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டு, பணி வழங்குவதற்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

மேலதிக தகைமைகள்:-

01) ஆண்டு 09 வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.

02) வயது 23-35 இற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

03) வன்னிப் பெருநிலப்பரப்பில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

வேண்டுகையாளரால் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட தன்விபரத்துடன் 17.03.2004 புதன்கிழமை காலை 10.00 மணிக்குச் சேரன் வாணிபம் நடுவப் பணிமனை,கிளிநொச்சி என்னும் முகவரிக்கு வருகை தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சேரன் வாணிபம்,
நடுவப்பணிமனை,கிளிநொச்சி.

(சி.9418)


# சாவு அறிவித்தல்



பிறப்பு 1929 - 03 - 15

இறப்பு 2004 - 03 - 15

## லூக்கஸ் மரிய செபமாலை

திருகோணமலையை பிறப்பிடமாகவும் 1ஆம் கட்டை வள்ளிபுனத்தை வசிப்பிடமாகவும் கொண்ட லூக்காஸ் மரிய செபமாலை 15.03.2004 அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் 16.03.2004 அன்று 08ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு சேமக்காலையில் அடக்கம்செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. சண்முகராயா,
வள்ளிபுனம்.

(4315)

# கண்ணீர் அஞ்சலி



மறைவு 13 - 03 - 2004

நாட்டுப்பற்றாளர்

## பொன்னையா சிறிதரன்

எமது நிறுவனத்தில் கடமையாற்றும் பொ.நிரிஜா அவர்களின் அன்புச் சகோதரனும், நாட்டுப்பற்றாளருமாகிய பொன்னையா சிறிதரன் அவர்களது அகால மரணச் செய்தி கேட்டு துயரடைந்து நிற்கிறோம். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இவருடன் சாவடைந்த நாட்டுப்பற்றாளர் திரு. ஈஸ்வரச்சந்திரன் அவர்களுக்கும் எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

போராளிகள், பணியாளர்கள்,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(சி-9422)

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 1929 - 03 - 15

உதிர்வு 2004 - 03 - 15

## அமரர் திருமதி லூக்காஸ் மரிய செபமாலை

### (திருகோணமலை)

சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் நாமத்திற்குரியவரான லெப். சீலன் (லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி) அவர்களை ஈன்றெடுத்த அன்புத் தாயார் அவர்கள் 15.03.2004 அன்று சுகயீனம் காரணமாக சாவடைந்துள்ளார். இவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை காணிக்கையாக்குகின்றோம்.

போராளிகள்,
சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி,
தமிழீழம்.

(4319)


# ஐ.நா. அணுவாயுதப் பரிசோதகர்களுக்குத் தடை
# ஈரானின் செயல் சந்தேகத்தை வலுவாக்குகின்றது!

### சர்வதேச அனுசக்தி அமைப்பின் தலைவர் கவலை

**ஈரான் அணுவாயுத பரிசோதகர்களை தனது நாட்டிற்குள் அனுமதிக்க மறுக்கின்றமையால் சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளதென சர்வதேச அணுசக்தி அமைப்பின் தலைவர் முகமட் அல்பராடி தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகளின் அணுவாயுத பரிசோதகர்கள் மீண்டும் நாட்டிற்குள் எப்போது அனுமதிக்கப் படுவார்களென கூறமுடியாதென ஈரான் அறிவித்துள்ளது. ஆயினும் விரைவில் ஐக்கிய நாடுகளின் அணுவாயுத பரிசோதகர்களை ஈரான் அனுமதிக்குமென அல்பராடி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அனுமதிக்கா விட்டால் மறைக்க வேண்டிய ஏதோ ஒன்றை ஈரான் கொண்டுள்ளதென சந்தேகிக்க வேண்டிய வாய்ப்பிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



ஈரான் அணு உற்பத்தியில் மீண்டும் முயற்சி செய்வதையிட்டு அமெரிக்கா மௌனம்காக்கும் நிலையில் அணுசக்தி தொழிற்சாலை ஊழியர்கள் தொழிற்சாலை வளாகத்தில் நடந்து செல்கின்றனர்.

நான்கு நாள் விஜயம் ஒன்றை ஈரானுக்கு மேற்கொண்டு வாஷிங்டன் திரும்பியுள்ள அல்பராடி தனது கருத்துக்களை ஈரானிய உயர் அதிகாரிகளிடம் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க ஈரான் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் வெளியிட்ட பிரகடனத்தில் முக்கிய அணுசக்தி தொழில் நுட்பம் பற்றி தெரிவிக்கவில்லையென சர்வதேச அணுசக்தி அதிகாரசபை நிறைவேற்றியுள்ள தீர்மானம் ஒன்றில் கூறப்பட்டுள்ளது. இத் தவறு குறித்து எத்தகைய நடவடிக்கை எடுப்பதுஎன்பது குறித்து சர்வதேச அணுசக்தி அமைப்பு ஜூன் மாதமளவில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது. அத்துடன் ஈரானுக்கு எதிராக பொருளாதார தடைகளைக் கொண்டு வருமாறு ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு சிபாரிசு செய்யும் தகுதியிருப்பதாக ராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

## தீவிபத்து

(மொஸ்கோ)

ரஷ்ய தலைநகரான மொஸ்கோவில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மனேஜ் கட்டடத்தில் நேற்று தீ விபத்து ஏற்பட்டது.

இதனால் இக் கட்டடம் பலத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் இதன் போது உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை.



இஸ்ரேலிய உலங்குவானூர்தியின் பீரங்கித்தாக்குதலில் சேதமுற்ற தனது உலோக வேலைத் தளத்தை அவதானிக்கும் பலஸ்தீனர் ஒருவர்.

## இரு தற்கொலைத் தாக்குதல் 11 இஸ்ரேலியர்கள் பலி!
### -சமாதானப் பேச்சுக்கள் ஒத்திவைப்பு

இஸ்ரேலில் நேற்று முன்தினம் அடுத்தடுத்து இடம் பெற்ற இரு வேறு மனித குண்டுத் தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 20 பேரளவில் காயமடைந்தனர்.

அஸ்ரா துறை முகநுழைவாயிலின் இரு இடங்களில் ஒன்றன் பின் ஒன்றாக தாக்குதல் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது. பலஸ்தினத்தின் ஹமாஸ், அல்-அக்ஷா தீவிரவாத அமைப்புக்கள் இந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளன. அத்தோடு கடந்த 7ஆம் திகதி இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதலில் காஸாப்பகுதியில் 14 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டமைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இது அமைந்துள்ளதாக கூறப்படுகிறது. இது இவ்வாறிருக்க இஸ்ரேல்- பலஸ்தீன பிரதமர்கள் இடையிலான திட்டமிடப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தை இந்த தாக்குதலால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 70 சத வீத மக்கள் ஆதரவுடன் மீண்டும் ரஷ்ய சனாதிபதியாக புட்டின் தெரிவு

(மொஸ்கோ)

ரஷ்ய சனாதிபதி விளாடிமிர் புட்டின் மீண்டும் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன் மூலம் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கான பதவிக்காலம் மக்களால் இவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சனாதிபதித் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது விளாடிமிர்புட்டினுடன் மேலும் ஐந்து பேர் தேர்தலில் போட்டியிட்ட போதிலும் 70 சதவீத மக்களின் ஆதரவு புட்டினுக்கு கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதே எனது குறிக்கோள் என வெற்றியீட்டியதன் பின்னர் கருத்து வெளியிட்ட அவர் கூறினார்.

அத்துடன் பொருளாதார வளர்ச்சி, ஊடக சுதந்திர மேம்பாடு, வாழ்க்கைத்தர உயர்வு என்பன தனது ஆட்சியில் முக்கிய இலட்சியங்களாக கொள்ளப்படுமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



ஹெயிட்டி தலைநகர் போட் ஒவ் பிரின்ஸில் ரோந்துப்பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் படையினரை அவதானிக்கும் ஹெயிட்டி இளைஞர்கள்.

## காஷ்மீர் பிரச்சினைக்கே முதலில் தீர்வு; முஷாரப்பின் கருத்திற்கு இந்தியா ஆட்சேபம்

(புதுடில்லி)

காஷ்மீர் தான் முதன் முதலாகத் தீர்க்கப்பட வேண்டிய மையப்பிரச்சினை என்பதை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளதாக பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் கூறியுள்ளதை இந்தியா நிராகரித்துள்ளது.

சனவரி மாதம் இஸ்லாமாபாத்தில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் எந்தவோர் மையப் பிரச்சினையும் கூறப்படவில்லை காஷ்மீர் உட்பட எல்லாப் பிரச்சினைகளும் என்று தான் கூறப்பட்டுள்ளதென இந்தியா கூறியுள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சர் டில்லியில் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார். இதேவேளை கூட்டறிக்கைக்கு விளக்கம் தருவது நம்பிக்கையை உருவாக்குவதற்கோ சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கோ ஏற்றதல்ல எனவும் அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. ஆயினும் இந்தியா ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளவைக்கு ஏற்ப சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல உறுதியாகவுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



யாவா, சுமத்திரா தீவுகளில் அரிதாகக் காணப்படும் சில்வர் லாங்கர் இனக் குரங்குகள் தமது ஒரு மாதக் குழந்தையுடன் காணப்படுகின்றன.

### ஸ்பெயின் பொதுத் தேர்தலில் சோஷலிசக் கட்சி வெற்றி

ஸ்பெயினில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலில் சோஷலிசக் கட்சி 43வீத வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது. இதேவேளை ஆளும் மத்திய வலதுசாரி மக்கள் கட்சி 38 வீத வாக்குகளையே பெற்றது.

எட்டு வருட கால ஆளும் கட்சியின் ஆட்சியை சோஷலிச கட்சி கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஸ்பெயினில் தேர்தலுக்கு முன்னதாக இடம் பெற்ற பாரிய குண்டுத் தாக்குதல் தேர்தலை பாதித்திருந்ததாக கூறப்படுகின்றது. 67 சதவீத மக்களே வாக்களித்திருந்தனர்.



அமெரிக்காவின் கலிபோர்னியா, மொஜெவ் பாலைவனப் பிரதேசத்தைக் கடந்து 140 மைல் தூர ஓட்டப் பந்தயத்தில் பங்குபற்றும் றோபோ மூலம் இயக்கப்படும் வாகனம் அமெரிக்கப் படையின் ரோபோக்களை இணைக்கும் திட்டத்திற்கமைய இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.




# சர்வதேச கவனத்தை ஈர்த்த சமகால கிரிக்கெட் போட்டிகள்



இன்று சர்வதேச கிரிக்கெட் அரங்கில் டெஸ்ட் அந்தஸ்தைப் பெற்ற அணிகள் அனைத்தும் சமகாலத்தில் போட்டித் தொடர்களில் கலந்துகொண்டுள்ள நிலையில் இரண்டு போட்டித்தொடர்கள் ரசிகர்கள் மத்தியில் ஆவலையும் பரபரப்பையும் ஏற்படுத்தி முதன்மைபெற்றுள்ளன.

ஒன்று சிறிலங்கா-அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர் மற்றையது வரலாற்றுச் சிறப்புமிக்க இந்திய-பாகிஸ்தான் தொடர்

டெஸ்ட் தொடரை எடுத்துக் கொண்டால் ஒருவேகத்தின் சாதனையை இரண்டு சுழற்பந்து வீச்சாளர்கள் முறியடிக்கபோட்டி போடுகின்றமையும் இந்திய-பாகிஸ்தானை பொறுத்தவரை போட்டித் தொடர்களை கைப்பற்றப்போவது யார் என்பதும் அமைந்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் ஒரு தொடர் ஆரம்பமாகின்றது என்றால் அன்றில் இருந்து ஒவ்வொரு அணிசார்ந்த ஆதரவாளர்கள், ரசிகர்களுக்கு கொண்டாட்டம். ஆனால் தற்போது ஒரு அணி சார்ந்த அரசு, அரசியல்வாதிகள் என உன்னிப்பாக அவதானிக்கும் அளவுக்கு கிரிக்கெட் தொடர்கள் அமைந்துவிட்டன. இதனை பிரதிபலிப்பதாகவே இந்திய-பாகிஸ்தான் தொடர் அமைந்துள்ளது.

ஏனெனில் இப்போட்டிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை பொறுத்தவரையில் ஒரு நாட்டின் தலைவருக்கு கொடுக்கப்படும் பாதுகாப்பை விட பிரமாண்டமானது.

இதேவேளை இனி நடைபெறவுள்ள போட்டிகளை முஷாரப் வாஜ்பாய் ஆகியோர் இணைந்து பார்வையிடுவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.



இப்போட்டியில் 5ஓட்டங்களால் இந்திய அணி வெற்றிபெற்ற அதேவேளை சர்வதேச ஒரு நாள் போட்டி ஒன்றில் இரு அணிகளும் சேர்ந்து ஆகக் கூடுதலாக ஓட்டங்களைப் பெற்ற போட்டியும் இதுவாகும். இந்தப் போட்டியில் வீசப்பட்ட 100 ஓவர்களில் இரு அணிகளுமாக 693 ஓட்டங்கள் பெறப்பட்டமை சர்வதேச ஒரு நாள் போட்டியில் புதிய சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு முன்னர், சிறிலங்கா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் சிங்கப்பூரில் 1995-1996 காலப்பகுதியில் 99.4 ஓவரில் 664 ஓட்டங்களைப் பெற்றதே ஆகக்கூடுதலான ஓட்டமாக இருந்தது.


சர்வதேச கிரிக்கெட் அரங்கில் ஒரு தொடர் ஆரம்பமாகின்றது என்று சொன்னால், இந்த வீரர் எத்தனை ஓட்டங்களைக் குவிப்பார். இந்தப் பந்து வீச்சாளர் எத்தனை விக்கெட்டுக்களை வீழ்த்துவார் என்றுதான் குறிப் பிடுவர். தற்போது அந்த நிலை மாறிஎந்த அணி வெல்லும் யார் சாதனை படைப்பார் என்ற எதிர்பார்ப்பே நிலவி வருகின்றது.

இது இவ்வாறிருக்க சிறிலங்காவில் முதல் முறையாக இரண்டு பந்து வீச்சாளர்கள் பற்றி அதிக எதிர்பார்ப்பு நிலவி வருகின்றது. யார் அந்த நட்சத்திர வீரர்கள்?

ஒருநாள் போட்டிகளை விட டெஸ்ட் போட்டிகளிலேயே பந்து வீச்சாளர்கள் அதிகம் பேசப் படுகின்றனர். இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. டெஸ்டில் ஒரு துடுப்பாட்ட வீரர் எத்தனை ஓவரை வேண்டுமானாலும் சந்திக்கலாம். எவ்வளவு பொறுமையாக வேண்டுமானாலும் ஆடலாம். அதேபோன்று ஒருபந்து வீச்சாளர் இத்தனை ஓவர்தான் வீசலாம் என்ற நிபந்தனையும் இல்லை. தங்களுக்குத் தரப்படுகின்ற வாய்ப்பைக் கொண்டு எத்தனை விக்கெட்டை வேண்டுமானாலும் வீழ்த்தலாம்.

அந்த வகையில் ஒரு தரமான பந்து வீச்சாளராக மேற்கிந்திய தீவின் வேகப் பந்து வீச்சாளர் கொட்னி வோல்ஷ் 519 விக்கெட்டுகளை கைப்பற்றி உலக சாதனைக்குரியவராக திகழ்கின்றார். 1984-1985 காலப் பகுதியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தனது டெஸ்ட் வாழ்க்கையை ஆரம்பித்த வோல்ஷ் தனது வயது ஒத்துழைக்காத நேரங்களில் கூட அபாரமாக பந்து வீசி விக்கெட்டுகளை கைப் பற்றியதுடன் 2000-2001 காலப் பகுதியில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடந்த கடைசி டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெற்ற போது 519 விக்கெட்டுகளை வீழ்த்தி அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள் பட்டியலில் தன்னை முதல் வீரராக முத்திரை பதித்தார். தனது 132 ஆவது டெஸ்டில் இந்த சாதனையை நிகழ்த்தினார்.





இந்நிலையில் வோல்ஷின் சாதனையை முறியடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் செயற்பட்ட வேகப்பந்து வீச்சாளர்கள் பலர் ஓய்ந்த நிலையில் இதனை முறியடிக்கப் போவது யார் என்ற நிலையில் இருவருக்கிடையில் தீவிரம் அடைந்துள்ளது.

குறிப்பாக பாகிஸ்தானின் வசிம் அக்ரம் ஓய்வு பெற்றுவிட்டார், ஆஸி அணியின் மெக்ராத கால் காயத்தால் தொடர்ந்து அவதிப்பட்டு வருகிறார். இவர் மீண்டும் அணிக்கு திரும்புவாரா என்பது சந்தேகமாகவுள்ளது பாகிஸ்தானின் மற்றுமொரு வேகமான வக்கார் வாய்ப்பை எதிர்பார்த்துள்ளார்.

வேகங்கள் வோல்ஷின் சாதனையை எட்ட நின்று பார்த்து வியந்து வரும் வேளையில் இந்தப் பந்தயத்தில் அவுஸ்திரேலியாவின் ஷேன்வோர்ன் சிறிலங்காவின் முத்தையா முரளிதரன் ஆகியோர் இந்த சாதனையை எளிதாக அடையக் காத்திருக்கின்றனர் இந்த சாதனையை எட்டிப்பிடிக்க இருவருக்கும் சிறிலங்கா அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர் களமாக யாக அமைந்திருந்தாலும் இப்போட்டித் தொடரில் சாதனை இலக்கை எட்ட முடியாது என்பது உறுதி. இருந்தும் ஒரு டெஸ்ட் போட்டி நிறைவடைந்த நிலையில் ஷேன் வோர்ன் 501 விக்கெட்டுகளை கைப்பற்றி முரளியைவிட முன்னிலையில் இருக்கின்றார். இருந்த போதும் முரளிதரனே முதலில் சாதனை இலக்கை எட்டுவார் என பெரிதும் எதிர் பார்க்கப்படுகின்றது.

---

# ஸ்ரீவ் காமிசன் அபாரப்பந்து வீச்சு இங்கிலாந்து அணிக்கு மகத்தானவெற்றி

மேற்கிந்தியத் தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீவ் காமிசனின்சிறப்பான பந்துவீச்சின் துணையுடன் முதலாவது டெஸ்ட் போட்டியில் மகத்தான வெற்றிபெற்று தனது வெற்றிப் பயணத்தை ஆரம்பித்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 1-0என்ற நிலையில் முன்னிலை பெற்றுள்ளது.

மேற்கிந்தியத்தீவின் ஜமேக்கா சபீனா பார்க் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அதன் முதல் இனிங்சில் 311ஓட்டங்களையும் இங்கிலாந்து அணி அதன் முதல் இனிங்சில் 339 ஓட்டங்களையும் பெற்றன. இதன்படி போட்டியின் நான்காம் நாளான நேற்று முன்தினம் விக்கெட் இழப்பின்றி 8 ஓட்டங்களுடன் இரண்டாவது இனிங்சை நேற்று தொடர்ந்த மேற்கிந்திய தீவுகள் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 47ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது.

இது மேற்கிந்திய அணி அதன் டெஸ்ட் வரலாற்றில் பெற்ற மிகக்குறைந்த ஓட்டங்களாகவும் பதிவானது.

மேற்கிந்தியதீவின் இரண்டாவது இனிங்சில் ஐந்து துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டம் எதுவும் பெறாது ஆட்டம் இழந்தனர். மேற்கிந்திய அணிக்காக அதி கூடிய ஓட்டங்களாக ரிட்லிஜேக்கப்ஸ் 15 ஓட்டங்களையும் டெபன்சிவிக் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஏனைய ஏன்பது துடுப்பாட்ட வீரர்களும் இரட்டை எண்ணிக்கையைக் கூட தாண்டவில்லை.

பந்துவீச்சில் ஸ்ரீவ்காமிசன் 12.3 ஓவர்கள் பந்துவீசி 12 ஓட்டங்களைக்கொடுத்து 7விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இவருக்கு அடுத்ததாக மத்யூ ஹொக்ஹார்ட் இரண்டு விக்கெட்டுக்களையும், சைமன் ஜோன்ஸ் எஞ்சிய ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



இதனை அடுத்து 20 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியினர் 2.3ஓவரில் வெற்றி இலக்கை எட்டினர். இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல்வோன் ஆட்டம் இழக்காது 11 ஓட்டங்களையும் மார்க்கஸ் ரெஸ்கொதிக் ஆட்டம் இழக்காது ஆறு ஓட்டங்களையும் பெற்று வெற்றியீட்டினார். இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர் வரும் வெள்ளிக் கிழமை ஆரம்பமாகின்றது.

---

# ஸிடேன் ஓய்வு பெறுகின்றார்?

பிரான்சின் முதல் தர கால்பந்தாட்ட வீரரும் 1998ஆம் ஆண்டு பிரான்ஸ் உலகக் கிண்ணத்தை கைப்பற்றுவதற்கு பெரிதும் உறுதுணையாக இருந்தவருமான ஸினடைன் ஸிடேன் "யூரோ 2004" போட்டியின் பின்பு விளையாடுவது பற்றி மீள்பரிசீலனை செய்யவிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.



முதலில் ஸ்பெயினின் ரியல்மட்ரிட் கழகத்தில் இருந்து விலகவும் அதனைத் தொடர்ந்து தேசிய அணியில் இருந்து விலகி ஓய்வுபெற தீர்மானித்திருப்பதாகவும் அவர் விளையாட்டு சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தற்போது பல முன்னணி வீரர்கள் அங்கம் வகிக்கும் ரியல் மட்ரிட் கழகத்துக்காக ஆடிவரும் ஸிடேன் இரண்டு முறை உலகின் தலைசிறந்த உதைபந்தாட்ட வீரருக்கான விருதைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்கள் முன்னே விரிந்துள்ள தேர்தல் களம்

எதிர்வரும் தேர்தலை சிங்கள தேசிய இனம் ஒருவகையில் பார்க்கையில் தமிழ்த்தேசிய இனம் முற்றிலும் மாறுபட்ட வேறு ஒரு விதத்தில் பார்க்கின்றது.

சிங்கள இனம் சீரழிந்து போயுள்ள தமது தேசத்தின் பொருளாதாரத்தையும் யுத்தத்தால் சந்தித்த பின்னடைவுகளையும் சீர்செய்யக்கூடிய ஆட்சியாளரைத் தேர்ந்தெடுக்க முயலுகின்றது.. இன்றைய யதார்த்தத்தில் சமாதான வழிமுறை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்தக்கூடிய ஓர் ஆட்சியாளரே இவற்றையெல்லாம் சீர்செய்யக்கூடியவர்களாக இருப்பர் என்பது சிங்கள இனத்தின் முடிவாகும். அவ்வாறு அவர்கள் முடிவெடுத்துள்ளதை உணர்ந்து கொண்டமையால் தான் யுத்தத்தைத் தீவிரமாக நடத்திய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இப்பொழுது தேர்தல், வாக்குறுதியாக வேனும் சமாதானத்தை வலியுறுத்த வேண்டியவராக இருக்கிறார். இன்று தென்னிலங்கையில் சமாதானத்தை வலியுறுத்தாதோர் எவருமேயில்லை.

எனினும் எதிர்வரும் 2-ஆம் திகதி இடம் பெறப்போகின்ற தேர்தல், அதிலே கிடைக்கப்போகின்ற முடிவு தென்னிலங்கையில் பெரிய மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்தி விடாது என்பது பல ஆய்வாளர்களது கணிப்பாகும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியின் கைக்கு பாராளுமன்றம் சென்றால் கூட அது தென்பகுதி மக்களின் வாழ்க்கையை பெரிதும் மாற்றியமைத்து விடப்போவதில்லை. ஏனெனில் சந்திரிகாவின் 10 வருடபதவிக்காலத்தில் எட்டு வருடங்கள் அவர் பாராளுமன்ற அதிகாரத்தை கொண்டிருந்த போதிலும் சிறிலங்கா அதனால் அழிவையே சந்தித்தது. அவர் நடத்திய கடுமையான தொடர்யுத்தம் தமிழ் மக்களை மட்டுமல்ல சிங்கள மக்களையும் பாதித்ததனால் தான் அவர்கள் கடந்த தேர்தலிலே சனாதிபதி சந்திரிகாவின் கட்சியைத் தூக்கியெறிந்தார்கள்.

அதேவேளை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவியேற்றால் என்ன நடக்கும் என்பதை கடந்த இரண்டு வருடங்கள் காட்டின. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைப் படிப்படியாகச் செயலிழக்க வைக்க சனாதிபதி சந்திரிகா மேற்கொண்ட முயற்சிகள் சிறிலங்காவை பெரும் இன்னல்களுக்கு உள்ளாக்கியது. எந்த ரீதியிலும் முன்னோக்கிச்செலுத்த முடியாத நிலையை உருவாக்கியது. ஆனால் இம்முறை அதேநிலை ஏற்பட இரண்டு வருடங்கள் பிடிக்காது. சனாதிபதி தனது அதிகாரங்களை அரசாங்கத்தின் மீது மட்டுமல்ல அரச திணைக்களங்கள், அலுவலகங்கள் மீதும் கூடப்பிரயோகிக்கலாம்.

இவ்வாறான ஒரு நிலையானது தென்னிலங்கை மக்கள் மத்தியில் பெரும் விரக்தியை சிறிலங்காவின் ஆட்சிமுறை, அரசியலமைப்புக்குறித்த விசனத்தை ஏற்படுத்தும். சனநாயக ஆட்சிமுறையில் நம்பிக்கையீனத்தை கூட உருவாக்கலாம்.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை எதிர்வரும் தேர்தலை வேறு விதமான கண்ணோட்டத்தில் பார்க்கின்றார்கள். அவர்களுக்கு இத்தேர்தல் ஆட்சியைத் தெரிந்தெடுப்பதற்கான தேர்தல் அல்ல. இந்தத்தேர்தலை மட்டுமல்ல பொதுவாக கடந்த 50 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற எந்தத் தேர்தலையுமே அவர்கள் தமது ஆட்சியாளரை தெரிந்தெடுக்கும் தேர்தலாகக் கருதியதில்லை. பதிலாக இழந்துபோன தமது அரசியல் உரிமைகளை மீட்டெடுக்கும் போராட்டத்தை நடத்தக்கூடிய பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் ஒரு களமாகவே தேர்தலைக் கருதி வந்திருக்கின்றனர்.

அபிவிருத்தி மாயைகளுடன் தமிழ்ப் பகுதிகளில் களமிறங்கிய கட்சிகள் தேர்தலில் வெற்றி பெறாமையானதும் தேசியக் கட்சிகள் எனத் தம்மைக் கூறிக்கொண்டு இனவாதச்செயல்களில் ஈடுபட்டு வந்த தென்னிலங்கை அரசியல் கட்சிகள் தமிழ் மக்கள் மத்தியில் எடுபடாமையானதும் இதனையே வெளிப்படுத்துகிறது.

27 வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்ற பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் தாம் இழந்துபோன சுயநிர்ணய உரிமையை மீட்டு தமக்கென்று ஒரு அரசை நிறுவுவது என்ற முடிவை உலகிற்குப் பறைசாற்றினார்கள். அம்முறை தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் மட்டுமல்ல தோல்வியடைந்த வேட்பாளர்கள் கூட தமிழ் மக்களின் இந்த நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்வதாக கூறியிருந்தார்கள். அவ்வாறு தமிழ்த்தேசிய இனம் எடுத்த முடிவிலிருந்து வழுவாது எத்தனையோ நெருக்கடிகள் மத்தியிலும் செயற்பட்ட விடுதலைப் புலிகளுக்கு தமிழ் மக்கள் தமது பூரண ஆதரவைவழங்கினார்கள். அதன் காரணமாகவே புலிகள் தலைமை தாங்கி நடத்திய ஆயுதப்போராட்டம் பெரும் வெற்றியை ஈட்டிக்கொடுத்தது.

அரசியல் ரீதியாக மக்கள் வழங்கிய ஆணைக்கு ஆயுதப்போராட்ட மூலம் இராணுவ ரீதியான வெற்றியை புலிகள் பெற்றுக்கொடுத்துள்ளதுடன் கடந்த இரண்டு வருடகாலமாக புலிகள் மேற்கொண்ட ராஜதந்திர ரீதியான நகர்வுகள் பெரு வெற்றியை ஈட்டித்தந்துள்ளன.

இன்று இலங்கையில் இராஜதந்திர நடவடிக்கைகள் கொழும்புடன் மட்டும் அல்லது தனியே சிங்களத் தலைமைத்துவத்துடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லை. தமிழ் மக்களின் தலைமைத்துவத் துடனும் ராஜதந்திர உறவுகளை சர்வதேச நாடுகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளமை இதனை வெளிப்படுத்துகின்றது .இது தமிழ் மக்களின் இலட்சியப் பயணத்திற்கும் அவர்கள் நடத்திய வீரமும் அர்ப்பணிப்பும் நிறைந்த போராட்டத்திற்கும் கிடைத்த வெற்றியாகும்.

இவ்வாறான சூழ்நிலையில் எதிர்வரும் 2ஆம் திகதி தேர்தல் ஒன்றைச் சந்திக்கும் நிலையை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்படுத்தித் தந்திருக்கிறார். அவரது அதிகார ஆசை கூட தமிழ் மக்களுக்கு ஒரு நன்மையைத் தேடித்தந்திருப்பதாகக் கூறலாம்.

அதாவது, தமிழ் மக்கள் தமது இலட்சியம் என்ன? என்பதை சர்வதேசம் புரிந்துகொள்ளக்கூடிய வகையில்- நாம் ஏன் இந்த வன்முறை சார்ந்த போராட்டத்தை நடத்தினோம்? எமது போராட்டம் ஏன் நியாயமானது? போன்றனவற்றை விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் நிரூபிப்பதற்கான - சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

ஆயுதப் போராட்டம் இடைநிறுத்தி வைக்கப்பட்டு அமைதிச் சூழல் நிலவுகையில் தேர்தல் களத்தில் தமிழ் மக்கள் தம்மை நிரூபிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பைச் சரிவரப் பயன்படுத்திக்கொள்வதன் மூலம் தமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை வலுப்படுத்துவது அவசியமான ஒன்றாகும்.

எவ்வாறு தமிழ்மக்கள் சொல்லொணாத் துன்பங்கள் மத்தியிலும் தமது உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தில் தமது சக்திக்கும் மீறிய பங்களிப்பைச் செய்தார்களோ அதற்கு ஒத்ததாக இந்த அரசியல் களத்திலும் தமது பங்களிப்பைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

தேர்தல் களத்திலும் கூட தமிழ் மக்கள் முற்றுமுழுதாகப் பங்குபற்றி தமது கருத்தை வெளிப்படுத்துவதற்குப் பல இடையூறுகள் உள்ளன. பல இடைஞ்சல்கள் ஏற்படுத்தப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

உதாரணமாக இலங்கை முழுவதிலுமுள்ள மக்கள் இயல்பான நிலையில் தமது சனநாயக உரிமையை நிலைநாட்டுவதற்காக பரவலான வாக்குச் சாவடிகள் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ள நிலையில், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்கின்ற பலலட்சம் மக்கள் அந்த வாய்ப்பை பெறாதவர்களாக இருக்கின்றனர். வாக்களிக்க அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படினும் கூட நீண்டதூரம் சென்று வாக்களிக்க வேண்டிய நிலையே அவர்களுக்கு உள்ளது.

ஆனால் இதனை ஒரு சவாலாக எடுத்து- ஒரு போராட்டமாக நினைத்து அனைத்து மக்களும் வாக்களிப்புக்குச் செலல வேண்டியது அவர்கள் அனைவரதும் கடமையாகும். அதனை அவர்கள் செய்தே தீருவர்.

இதேவேளை வாக்களிக்கச் செல்லும் மக்களின் வாக்களிப்பு வேகத்தைக் குறைக்க சிறிலங்கா இராணுவத்தினர், தேசவிரோதிகள் ஏதாவது தந்திரோபாயங்களை மேற்கொள்ளக்கூடும் என்ற சந்தேகமும் நிலவுகின்றது. இதனையும் தமிழ்மக்கள் எதிர்கொண்டு முறியடிக்க வேண்டும்.

இதேவேளை கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக நடைபெற்ற தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டத்தை ஒழித்துவிட சிங்கள இன வாதிகள் மட்டுமல்ல வல்லாதிக்க சக்திகளும் கூட பெரு முயற்சி எடுத்தன. எவ்வளவோ இடையூறுகளை ஏற்படுத்தின. இவற்றையெல்லாம் தமிழ்த் தேசிய இனம் ஒன்று திரண்டு முறியடித்து வெற்றியை ஈட்டியது.

அதுபோலவே இப்பொழுது அரசியல் களத்திலும் அதேசக்திகள் பல இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றன. அவ்வாறான ஒரு முயற்சிதான் இப்பொழுது அந்த சக்திகளால் கருணா மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்த இடையூறை முறியடிப்பதும் தமிழ்த் தேசிய இனத்தின் முக்கிய கடமையாகும். தமிழ் மக்களின் அரசியல் ரீதியான இப்போராட்டத்தில் ஏற்பட்டுள்ள இடையூறை ஏப்பிரல் 2ஆம் திகதி தேர்தல் களத்தின் மூலம் முறியடிக்க வேண்டிய தேவையும் தமிழ் மக்களுக்கு உண்டு.

இப்பொழுது இடம் பெறுகின்ற விகிதாசார தேர்தல் முறையானது முன்னைய தொகுதிவாரித் தேர்தலிலிருந்து வேறுபட்டது. இத்தேர்தல் முறையில் உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் அனைவரும் வாக்களிப்பதன் மூலமே போராட்ட விரோதசக்திகளைத் தோற்கடிக்கமுடியும் என்பதை மறந்து விடக் கூடாது. இத்தேர்தலானது தமிழ் மக்களின் உரிமைக்குரலை உலகில் ஓங்கியொலிக்கச் செய்யும் ஒரு களமாகப் பார்க்கப்படுகின்றமையால் இதில் தமிழ் மக்கள் வெற்றிபெறுவது இன்றியமையாததாகும். இதில் பெறப்படும் வெற்றியானது போராட்டத்திற்கு மிகப்பெரிய உந்து சக்தியாக அமையும் என்பது நிச்சயம்

**வேலவன்**

# ஏப்பிரல் 3ஆம் திகதி சனாதிபதி சந்திரிகா நாட்டின் பிரதமராகப் பதவியேற்பார்!

## -ஐ.ம.சு.மு. பேச்சாளர் அமுனுகம ஆருடம்

(கொழும்பு)

ஏப்பிரல் 3ஆம் திகதி சிறிலங்காவின் பிரதமராக தற்போதைய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவியேற்கவுள்ளார். இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஏப்பிரல் இரண்டாம் திகதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெறும். மூன்றாம் திகதி சனாதிபதி சந்திரிகா பிரதமராகப் பதவியேற்கப் போகின்றார். ரணில் விக்கிரமசிங்க தனது பெட்டி படுக்கைகளுடன் அலரி மாளிகையிலிருந்து வெளியேற வேண்டிவரும் 67 அமைச்சர்கள் அவரின் அரசாங்கத்தில் பதவி வகித்துள்ளார்கள். இவர்கள் வேறு கட்சிகளுக்குத் தாவி விடுவார்கள். ஜே.வி.பி கூட்டுடன் தேர்தலில் நாங்கள் நிச்சயம் வெற்றிபெறுவோம் என பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

# இரத்ததானம்

(அலுவலகசெய்தியாளர்)

தவக்காலத்தினை முன்னிட்டு நேற்று முன்தினம் கிளி. மாவட்ட வைத்திய சாலையில் இரத்ததான நிகழ்வு இடம் பெற்றது.

கிளிநொச்சி புனித திரேசாள் ஆலய வண. போசுவ்வாஸ் இளையோர் மன்றத்தைச் சேர்ந்த 15 உறுப்பினர்கள் தவக்கால ஒறுத்தல் நடவடிக்கையாக கிளி. மாவட்ட வைத்திய சாலையில் இரத்ததானம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜோ)

# மன்னாரில் வாக்காளர் அட்டைகள் நேற்றுமுதல் விநியோகம்

மன்னாரில் நேற்றுமுதல் வாக்காளர் அட்டைகள் விநியோகம் தபால் மூலம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இம்முறை 78 ஆயிரத்து 280பேர் வாக்களிக்கவுள்ளார்கள். இதே சமயம் வாக்குச்சீட்டுகளும் பலத்த பாதுகாப்புடன் நேற்று வன்னி வந்து சேர்ந்துள்ளது.(மி)

# பெப்ரவரியில் சிகிச்சை பெற்றோர்

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் கடந்த பெப்ரவரி மாதம் 3522 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளதாக மேற்படி வைத்தியசாலையின் கடந்த மாத நிலவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையில் வெளிநோயாளர் பிரிவில் 2652 நோயாளர்களும், சிரங்குக்காக 396பேரும், குருதிச்சோகையினால் 171பேரும் ,சாதாரண காய்ச்சலினால் 167 பேரும் மலேரியாக்காய்ச்சலினால் 47பேரும் ,வயிற்றோட்டத்திற்காக 29 பேரும், சிறு சத்திரசிகிச்சைக்காக 09பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர். இதேவேளை மேற்படி வைத்தியசாலையின் மகப்பேற்று மனையில் கடந்தமாதம் மகப்பேற்றுக்காக 36 கர்ப்பிணித்தாய்மார் அனுமதிக்கப்பட்டு அதில் 15 சிசுப்பிறப்பு இடம்பெற்றுள்ளது.(ஆ)

# நீர்வெறுப்பு நோயினால் குடும்பஸ்தர் மரணம்

(அலுவலகசெய்தியாளர்)

நீர்வெறுப்பு நோய்த்தாக்கத்துக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப் பெற்ற குடும்பஸ்தர் ஒருவர் நேற்று அதிகாலை மரணமானார்.

கடந்த ஜனவரிமாதம் இரண்டாம் திகதியன்று நாயினால் கடியுண்ட மேற்படி நபர் அதற்கான உரிய வைத்திய நடைமுறைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ளத் தவறியதனாலேயே இம்மரணம் சம்பவித்துள்ளதென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கண்டாவளையைச் சேர்ந்த காசிநாதர் குமாரசாமி (வயது52) என்ற குடும்பஸ்தரே நீர்வெறுப்பு நோயின் தாக்கம் காரணமாக மரணமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜோ)

# சமுதாயத்தை நல்ல முறையில் வளர்த்தெடுக்க முன்பள்ளிகள் சிறப்பாக செயற்பட வேண்டும்

### முன்பள்ளி மேம்பாட்டு நிலைய தலைவர் கருத்து

எங்கள் சமுதாயத்தினை நல்ல முறையில் வளர்த்தெடுப்பதனால் முன்பள்ளிகள் சிறந்த முறையில் இயங்கவேண்டும். ஓர் சமுதாயத்தின் ஆணிவேர் இன்றைய சிறார்கள். அவர்களை சமுதாயத்திற்கு ஏற்றாற் போல் வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு எங்களைச் சார்ந்தது.

இவ்வாறு வவுனியா தெற்கு வலய முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் பூவரசங்குள பிரிவுக்கான நடப்பு வருடநிறுவாக சபைத்தெரிவு அண்மையில் வவுனியா கலைமகள் மண்டபத்தில் இடம்பெற்றபோது, புதிதாக தெரிவு செய்யப்பட்ட தலைவர் இ.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

யேசுபிரான், காந்தியடிகள் போன்றோர் மக்களுக்கு சேவை செய்ததால்தான் அவர்களை இன்றும் உலகம் மதித்து வணங்குகின்றது. ஏனையவர்களுக்கு உதவி செய்வது வீணாக்கப்படுவதல்ல. கோடான கோடி மக்கள் பூமியில் பிறக்கின்றார்கள். ஆனால ஓர் சிலர்தான் உலகில் மிளிர்கின்றார்கள் என்கிறார்.

அதேவேளை இணைப்பாளர் திருமதி எஸ்.அருள்வேல்நாயகி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தலைவராக இ.சுப்பிரமணியம் தெரிவாக, உபதலைவராக S.சுதா,செயலாளராக,உ.பரமேஸ்வரன், பொருளாளராக இவானதி, நிர்வாக சபை உறுப்பினர்களாக பத்துப பேரும்தெரிவுசெய்யப்பட்டனர்.

# பொலிஸ் அதிகாரி மாற்றம்; அமைச்சர் ஹக்கீம் கவலை

(கொழும்பு)

கல்முனை பொலிஸ் நிலைய அத்தியட்சகரை எந்த ஒரு குற்றச் செயல்களும் இல்லாமல் சனாதிபதி அம்பாறைக்கு மாற்றம் செய்துள்ளார் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தலைவர் சமீபத்தில் சிறிலங்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பொழுது அவரிடம் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் நடவடிக்கைகளை மட்டுப்படுத்துவதற்கே சனாதிபதி இச்செயலை மேற்கொண்டுள்ளார் என ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

# சேவையைப் பாராட்டுகின்றோம்



கிளி/ஆனைவிழுந்தான் குளம் அ.த.க. பாடசாலையில் அதிபராக இருந்து ஓய்வுபெற்ற திரு.மு. இராமச்சந்திரன் அவர்கள் ஆசிரியராக, அதிபராக கல்விச்சேவையில் 33வருடங்கள் கடமையாற்றியமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**திரு.மு.இராமச்சந்திரன்**

கரைச்சிக்கோட்ட அலுவலகம்

**கோட்ட அதிபர்கள்,**
**கோட்டக்கல்வி**
**அலுவலகம்,**

(4314)

# சாவு அறிவித்தல்




## திரு. வைத்திலிங்கம் கதிரவேலு

அனலை தீவைப் பிறப்பிடமாகவும், இராமநாதபுரம் இல. 494, 6ம் யுனிற்ஐ, வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வைத்திலிங்கம் கதிரவேலு அவர்கள் 15.03.2004 அன்று சிவபதம் அடைந்தார். அன்னார் அமரர்கள் வைத்திலிங்கம்- சிவகாமி என்பவர்களின் மகனும், அமரர்கள் வைரமுத்து -இராசம்மாவின் மருமகனும், அமரர் நாகேஸ்வரியின் கணவரும், அமரர் வள்ளியம்மை, தியாகராசா (கனடா), குணரத்தினம்(கனடா), அன்னலட்சுமி (கனடா), சண்முகநாதன் (கனடா), மாணிக்கவாசகர் (உருத்திரபுரம்) ஆகியோரின் சகோதரரும், அமரர் தர்மலிங்கம், தங்கமலர் (கனடா), ஜெயலட்சுமி (கனடா), தியாகராஜா (கனடா), சுந்தராம்பாள் (கனடா), மகேஸ்வரி (உருத்திரபுரம் ) ஆகியோரின் மைத்துனரும் சாரதாதேவி (உபதபாலதிபர், இராமநாதபுரம்), செல்வராஜா (கனடா), கமலாதேவி (இராமநாதபுரம்), திருநாவுக்கரசு (கனடா), ஸ்ரீகாந்தராசா (கனடா), செந்தில் குமரன் (கனடா) ஆகியோரின் தந்தையாரும், அமரர் மகாலிங்கம், ஜெயந்தி(கனடா), நடராசா (இலக்கியப்பிள்ளை புடைவையகம் வட்டக்கச்சி), கிருஸ்ணவேணி (கனடா), கமலவேணி(கனடா), ஸ்ரீகலா(யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், சயந்தன், காயத்திரி, கஸ்தூரி, பகீரதி, சஞ்ஜீவன், இராகவி, காண்டீபன், ஸ்ரீவிடங்கன், இலக்கியா, குந்தவி, மயூரி, சாரங்கன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இராமநாதபுரம் 494 ம் இலக்க இல்லத்தில் 18-03-2004 வியாழக்கிழமை பி.ப.4.00 மணியளவில் நடைபெற்று இராமநாதபுரம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:-
**நடராசா**
**மருமகன்.**

(4316)

# கண்ணீர் அஞ்சலி



அன்பின் திருவுருவாய்
அறிவின் விழிவீச்சாய்
பண்புடனே பணியாளரை
பாசமாக அரவணைத்து
பாரினிலே வாழ வைத்த – எம்
அன்புத் தெய்வமே – நீர்
மறைந்தாலும் என்றும் –எம்
மனங்களிலே நிறைந்திருப்பீர்.

காசிநாதர் குமாரசாமி அவர்கள் 15.03.2004அன்று காலமாகிவிட்டார். அன்னாரது மறைவையிட்டு மிகுந்த வேதனையடைவதோடு, பெருந்துயரில் மூழ்கியுள்ள அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அருட்பிள்ளையார் பல்வகை வாணிப முகாமையாளரும்**
**மாவீரர் மேஜர் நம்பிமாறனின் தந்தையாருமாகிய**

## காசிநாதர் குமாரசாமி

(செல்லவாரிப்பிட்டி கண்டாவளை)

அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டும்...

**பணிப்பாளர், பணியாளர்கள்,**
**அருட்பிள்ளையார் பல்வகை வாணிபம்,**
**கிளிநொச்சி.**

(4318)

சிந்தனைக்கு



இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதி பூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 16-03-2004


## சமாதானத்தின் விரோதியாக....!

கருணாவின் நடவடிக்கைக்குப் பின்னால் உள்ள தமிழ் இனவிரோத சக்திகள், விடுதலைப்புலிகளுக்கு எதிரான சக்திகள் யார் என்பது குறித்துப் பல ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்ற அதேவேளை, கருணாவும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான-தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைக்கு எதிரான சக்திகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முயற்சித்துள்ளமை தற்பொழுது வெளிவரத் தொடங்கியுள்ளது.

இந்த வகையில், வெளியாகியுள்ளதொரு தகவலே கருணா தனது முடிவை கடந்த மூன்றாம் திகதி அறிவிப்புச் செய்வதற்கு முன்பாக-சனாதிபதி சந்திரிகாவுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டமையாகும். இது ஆச்சரியப்படத்தக்கதொன்றாக இல்லாது விடினும் கருணாவின் நடவடிக்கை எத்தகைய எல்லையைத் தொடக்கூடியது என்பது மக்களால் நிச்சயம் அறியப்படவேண்டியதொன்றே ஆகும்.

இலங்கையின் அரசியலைப் பொறுத்து கருணாவின் தெரிவு சரியானதொன்றே. ஏனெனில், விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டையும், தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைக்கான கோரிக்கையை நிராகரிக்கும் சக்தியாகவும் சனாதிபதி தரப்பு இருப்பது மட்டுமல்ல இவற்றைவிட இரண்டு முக்கியமான காரணிகளையும் அது தன்னகத்தே கொண்டுள்ளது.

இதில் ஒன்று விடுதலைப்புலிகளுக்கும்-தமிழ் மக்களுக்கும் எதிரானதொரு மோசமான யுத்தத்தை நடாத்திய ஒரு ஆட்சியாளர் என்பதாகும். இரண்டாவதாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாகவும் பாதுகாப்பு அமைச்சை தன்னகத்தே கொண்டவராகவும் உள்ளமையாகும். இதேவேளை, கருணாவின் தேவையானது விடுதலைப்புலிகளுக்கு எதிரான சக்தியாகவும் அத்தோடு அதிகார பலம் பொருந்தியதும், தனக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடியதானதொரு சக்தியாகவும் இருத்தல் வேண்டும் என்பதாகும்.

அதுமட்டுமல்ல, விடுதலைப்புலிகளுடன் எவ்வேளையிலும் இணக்கப்பாட்டிற்கு வரமுடியாத நிலையிலுள்ள சக்தியாகவும் சனாதிபதி சந்திரிகா உள்ளார் என்பதும் கருணா சந்திரிகாவின் உதவியை நாடுவதற்குக் காரணமாகும். ஏனெனில் சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டுச்சேர்ந்துள்ள ஜே.வி.பி.யானது இனப் பிரச்சினைக்கான அரசியற் தீர்விற்கு அதிகாரப் பரவலாக்கல் என்பதை நிராகரிக்கும் ஒரு சக்தியாகவே உள்ளது. இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா தேர்தலில் வெற்றிபெறினும் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காண்பார் என்பது எதிர்பார்ப்பதற்கில்லை.

ஆனால், சனாதிபதி சந்திரிகா தற்பொழுது சமாதானப் பேச்சுவார்த்தை அரசியற்தீர்வு என்பனபற்றிப் பேசிவருவதானது தற்போதைய அரசியற் சூழ்நிலையின் கைதிகளாக அவர்கள் இருப்பதே. சிலவேளை அவர்கள் ஆட்சி அதிகாரத்திற்குவரின் இத்தகைய சூழ்நிலையை ஓரம் தள்ளிவிட்டுச் செயற்படவும் கூடும். அதாவது இன்று அவர்கள் சமாதானம் குறித்துப் பேசுவதானது சந்தர்ப்பவசமானதே. ஒருவகையில் நிர்ப்பந்தமானதும் கூட.

இதேபோன்றதே அவர்கள் இன்று கருணாவின் கோரிக்கைக்கு வெளிப்படையாக உதவியளிக்க முன்வராமல் போனமையும் ஆகும். தற்போதைய அரசியல் சூழ்நிலையில் கருணாவின் கோரிக்கைக்கு இணங்க கருணாவுடன் ஓர் யுத்த நிறுத்த உடன்பாடு செய்துகொள்வதோ, அன்றி கருணாவிற்கு வெளிப்படையான இராணுவ மற்றும் உதவிகளை அளிப்பதோ சமாதானத்திற்கு விரோதமான நிலைப்பாட்டை சனாதிபதி சந்திரிகா மேற்கொள்வதாக அர்த்தப்படுத்தப்பட்டுவிடும். இது தற்பொழுது அவர் பேசும் சமாதானத்திற்கு மாறானதாகப் பிரச்சாரப்படுத்தப்படும் என்பதன் காரணமாகவே கருணாவின் கோரிக்கையை அவர்களால் நிறைவேற்ற முடியாமல் போனது.

ஆனால், அவர்கள் கருணாவைப் பாதுகாப்பதிலும், அவருக்கு உதவுவதிலும் தீவிர அக்கறையும், கரிசனையும் கொண்டுள்ளனர் என்பதை அவர்களின் நடவடிக்கைகள் தெளிவாகவே வெளிப்படுத்துவதாக உள்ளது. இதற்கு சனாதிபதி சந்திரிகாவின் கட்டுப்பாட்டிலுள்ள அரச ஊடகத்துறையானது கருணாவிற்கு கொடுக்கும் முக்கியத்துவம் எடுத்துக்காட்டாகக் கொள்ளத் தக்கதாகும்.

இது ஒருபுறமிருக்க சிறிலங்கா இராணுவத் தளபதி பல்லேகலவிற்கும், கருணாவிற்கும் இடையில் நெருக்கமான உறவு வளர்ச்சி கண்டுள்ளது. இது சனாதிபதி சந்திரிகாவின் ஆசியும் ஒத்துழைப்பும் இல்லாதுவிடில் நடைபெறுவதென்பது சாத்தியமற்றதொன்றாகும். மட்டக்களப்புப் பகுதியில் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ள பிரதான வீதிகளில் கருணாவின் அடியாட்கள் ஆயுதங்களுடன் வாகனங்களைச் சோதனையிடுவதில் இருந்தே இராணுவத்தரப்புடன் கருணாவிற்கு வளர்த்துக்கொண்டுள்ள உறவைப்புரிந்து கொள்ள முடியும்.

இந்தரீதியில் கருணாவின் நடவடிக்கையானது ஒருபுறத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிரானதாக-விடுதலைப்புலிகளுக்கு எதிரான சக்திகளுடன் கூட்டுச் சேர்வதானதாக இருக்கையில் மறுபுறத்தில் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுஎன்ற நிலைப்பாட்டிற்கு மாறான சக்திகளுடனும் கூட்டுவைத்துக்கொள்ளும் நோக்கம் கொண்டதாகவும் இருந்துள்ளது. அதாவது கருணா விடுதலைப்புலிகளின் விரோதியாக மட்டுமல்லாது சமாதானத்தின் விரோதியாகவும் தமிழ் மக்களின் விரோதியாகவும் தன் செயற்பாட்டை மேற்கொள்ள முற்பட்டுள்ளார்.

இந்நிலையில் கருணா தேர்தலின் பின்னர் எத்தகைய முடிவுகளை மேற்கொள்வார் என்பதையும் ஊகிப்பதற்கு வாய்ப்புண்டு. அதாவது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தரப்பு தேர்தலில் வெற்றிபெற்றாலோ அன்றி ஏதோ ஒரு வகையில் அரசாங்கத்தைக் கைப்பற்றினாலோ கருணா சிறிலங்கா ஆயுதப்படைக்கு ஒத்துழைக்கும் ஓர் ஆயுதக்குழுவாக தன்னை மாற்றிக்கொள்ளக்கூடும். இதன்மூலம் தேசத்துரோகக்கும்பல் ஒன்றின் தலைவராக அவர் தனது செயற்பாட்டைத் தொடரமுடியும்.

# இலங்கையின் அரசியல் மாற்றங்கள் மக்களுக்கான எம் உதவியைப் பாதிக்காது

## -டென்மார்க் அதிகாரிகள் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டாலும் டென்மார்க் அரசாங்கம் நடைமுறைப் படுத்துகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமென அகதிகள் தொடர்பான டென்மார்க்சபை உறுதியளிதத்துள்ளது.

வன்னியிலிருந்து வெளியேறி அகதிமுகாம்களில் வாழ்கின்ற மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு 90 மில்லியன் ரூபாவை வவுனியா அரசாங்க அதிபரிடம் இச் சபை வழங்கியுள்ளது.

அகதிகள் தொடர்பான டென்மார்க்சபையின் பிரதிநிதிகள் கடந்த சனிக்கிழமை வவுனியாவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந் தனர். இவர்கள் வவுனியா அரச அதிபரைச் சந்தித்து கலந்துரை யாடினர்.

# பல்கலை தொழிற்சங்க சம்மேளனம் புதன்கிழமை முதல் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தொழிற்சங்க சம்மேளனம் எதிர்வரும் 17ஆம் திகதி புதன கிழமை முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது.

அரசாங்கம் வெளியிட்டுள்ள சம்பளம் தொடர்பான சுற்றறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே வேலை நிறுத்தப் போராட்டத் தில் ஈடுபடத் தீர்மானித்துள் ளதாக, தொழிற்சங்கச் சம்மேள னத்தின் பேச்சாளர் லியனல் மல் வத்தே கூறியுள்ளார். புதிய சம் பள முறைப்படி பல் கலைக்கழக ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதாக மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சு உறுதியளித்தது. இதனையடுத்தே கடந்த 3மாதங்களுக்கு முன்னர் மேற் கொள்ளவிருந்த போராட்டம் கைவிடப்பட்டது.

ஆனால் கடந்த மூன்றாம் திகதி புதிய சுற்றறிக்கை அனைத் துப் பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதில் மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சு ஏற்றுக்கொண்ட விடயத்திற்கும் சுற்றறிக் கையில் கூறப்பட்ட விடயத்திற் கும் பாரியளவிலான வித்தியா சங்கள் உள்ளன.

எனவே இப்பிரச்சினைக்கு உரிய தீர்வொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். இல்லையேல் தொடர்ச்சியான தொழில் சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## லங்காதீப பத்திரிகை ஆசிரியருக்கு விமல்வீரவன்ச அச்சுறுத்தல்!

(கொழும்பு)

ஜே.வி.பி. பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச இம்மாதம் 10ஆம்திகதி இரவு லங்காதீப ஆசிரியர் தமக்கு எதிராக பத்திரிகையில் வெளியிட்ட செய்திகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொலைபேசி மூலமாக அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என அப்பத்திரிகை ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

மேலும் வீரவன்ச இதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும், லங்காதீப காரியாலயத்திற்கு முன்பாக மறியற்போராட்டம் மேற்கொள்ளப் படும் என மிரட்டல் விடுத்துள்ளார்.

ஒரு பத்திரிகை நிறுவனத்தில் உயர் பதவிவகிக்கும் ஒரு ஆசிரியருக்கு இம்மாதிரியான பயமுறுத்தல் விடுவதைப் பற்றி பத்திரிகை நிறுவனம் கண்டனம் தெரிவித்துள்ளது.

# தேர்தலில் மோசடிமூலம் வெற்றிபெற ஐக்கிய தேசிய முன்னணி திட்டமிடுகின்றது

## -சனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மோசடிகள் மூலம் வாக்குகளைப பெற்று வெற்றிபெற ஐ.தே. முன்னணி திட்டமிடுவதாக தமக்கு தகவல் கிடைத்திருப்பதாக சனாதிபதி தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் கடந்த நாட்களில் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் முன்னாள் பாதுகாப்புச்செயலரும் சில இராணுவ பொலிஸ அதிகாரிகளும் இணைந்து வகுத்திருப்பதாக கூறப்படுகிறது.

இதன் ஒரு கட்டமாக விடுதலைபுலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மோசடிகள் மூலம் வாக்குப் பெட்டிகளை நிரப்பி தமிழர் தேசியக் கூட்டணிக்கு அதிக வாக்குகளைப் பெற்றுக் கொடுக்க திட்டமிடப்பட்டிருப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இப்பகுதிகளில் வாக்குச்சாவடிகளை ஏற்படுத்து வதற்காக தெரிவிக்கப்படும் அழுத்தத்தின் காரணம் இப்போது புரிகிறது எனக் கூறியுள்ள அவர், அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டம் இதனைவலியுறுத்துகின்றது என்றார்.

# நாட்டை மீட்டெடுக்கவே சு.க.வுடன் இணைந்துள்ளோம்

## -ரில்வின் சில்வா கூறுகின்றார்

இந்தத்திர்க்கமான தேர்தலில் ஜே.வி.பி. தனது 'மணி' சின்னத்தை தவிர்த்துவெற்றிலைசின்னத்தில்சிறில.சு.க.வுடன்இணைந்துபோட்டியிடக் காரணம் நாட்டை மீட்டெடுப்பதே என ஜே.வி.பி.பிரதம செயலர் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். அங்கு நடைபெற்ற பிரச்சாரக்கூட்டத்தில் அவர் மேலும் பேசும்போது, தமது கட்சி எதனையும் திட்டமிட்டே செயற்படுத்தும் எனவும் ஒருவருட காலமாக பேச்சுவார்த்தை நடத்தி நன்கு சிந்தித்தே கூட்டணி அமைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அக்கட்சியின் ஊவா மாகாண வேட்பாளர் கூறும் போது ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி ஐ.ம.சு.முன்னணி ஆட்சிக்கு வந்தவுடன் ஜே.வி.பி.யினருக்கு 4அமைச்சுப் பதவிகள் கிடைக்கும் எனவும் அவற்றுள் விவசாய அமைச்சுப் பதவி ஒன்றாகும் என்று கூறியுள்ளார்.

# இந்திய வீரர்களின் பந்துவீச்சு கவலையளிக்கின்றது

## ஆஸி. பயிற்றுவிப்பாளர் ஜோன்ரைட்

இந்திய அணியின் பந்துவீச்சு கவலையளிக்கக் கூடியதாக இருப்பதாக அணியின் பயிற்றுவிப்பாளர் ஜோன் ரைட் கவலை தெரிவித்துள்ளார். பந்துவீச்சின் தரத்தை உடனடியாக மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

ராவல்பிண்டி மைதானத்தில் வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது அவர் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதே சமயம் முதல் போட்டியில் முதுகுவலி காரணமாக பங்கேற்காத வி.வி.எஸ்.லக்ஸ்மன் தற்போது பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். அவர் இன்றைய 2வது போட்டியில் கலந்து கொள்வார் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

# பங்களாதேசுடனான தொடரை சிம்பாப்வே கைப்பற்றியது

சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணிக்கும் சிம்பாப்பே அணிக்கும் இடையே நேற்று முன்தினம் நடைபெற்ற 5 ஆவதும் இறுதியுமான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சிம்பாப்பே அணி 3 விக்கெட்டுக்களால் பங்களாதேஷை தோற்கடித்தது. இதன் மூலம் 5போட்டிகள் கொண்ட தொடரை 2-1 என்ற கணக்கில் சிம்பாப்பே கைப்பற்றியது. இரண்டு போட்டிகள் மழை காரணமாக கைவிடப்பட்டன.

ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய சிம்பாப்பே அணி 42.3 ஓவர்களில் 7 விக்கெட்களையிழந்து வெற்றியிலக்கை அடைந்தது.




## முரளி பங்கேற்பதில் சந்தேகம்!

இன்று கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெறும் அவுஸ்திரேலியாவுக்குகெதிரான 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சிறிலங்கா அணியின் நட்சத்திரப்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் பங்கேற்பது சந்தேகத்திற்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் சிறிலங்கா அணி வீரர்கள் பயிற்சியிலீடுபட்டவேளை இவர் வயிற்றுக் கோளாறு காரணமாக பயிற்சிகளில் ஈடுபடவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது. எனினும் இறுதிநேரம் இவர் குணமடைந்து ஆடு களத்துக்குத் திரும்புவார் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

# நாட்டுப்பற்றாளர் ஈஸ்வரச் சந்திரனுக்கு மக்கள் அஞ்சலி செலுத்தினர்

(அலுவலக செய்தியாளர்)

நாட்டுப்பற்றாளர் ஈஸ்வரச்சந்திரனின் பூதவுடல் நேற்று திருநகர் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

முன்னதாக நேற்றுக் காலை 10.00 மணிக்கு அன்னாரின் பூதவுடல் மக்கள்அஞ்சலிக்காக அரசறிவியற்கல்லூரியில் வைக்கப்பெற்று அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றது.

அரசறிவியற் கல்லூரியைச் சேர்ந்த முருகுபாரிமகன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் கலந்துகொண்டு பூதவுடலுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து நாட்டுப்பற்றாளர் ஈஸ்வரச்சந்திரன் அவர்களின் துணைவியார் அன்னலட்சுமி, புதல்வி தேனுகா ஆகியோர் பூதவுடலுக்குமலர்மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினர். அடுத்து இரங்கலுரை இடம்பெற்றது.

இரங்கலுரையினை அரசியல் துறையைச் சார்ந்த சங்கீதன், விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம், புலித்தேவன், தமிழீழ கல்விக்கழக துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரர், பிரான்சிஸ் ஜோசப் அடிகள்,தம்பி அப்பா ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து போராளிகள், பொதுமக்கள் பூதவுடலுக்கு மலரஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து, பூதவுடல் பாண்ட் வாத்தியஇசையுடன் அலங்கரிக்கப்பட்ட விசேட ஊர்தியில் பாடசாலைமாணவர்கள் போராளிகள் அணி வகுத்துவர பிரதானவீதி வழியாக ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு பி.ப.1.30 மணிக்கு திருநகர் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (சோ)

# தேசியத் தலைவர் ஊட்டிய விடுதலை உணர்வை எந்தச் சக்தியாலும் மழுங்கடிக்க முடியாது

## மட்டு. - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்

அதிகார சக்திகளுடைய திட்டங்களுக்கு ஏற்ப எமது போராட்டத்தை திசைதிருப்பி ஒற்றுமைக்கு களங்கத்தை ஏற்படுத்துவதற்கு கருணா தீவிரமாகச் செயற்பட்டு வருகிறார். ஆனால், எமது தேசியத் தலைவரால் எமக்கு ஊட்டப்பட்ட விடுதலை உணர்வினையும சுதந்திர வேட்கையையும் எந்தவோர் சக்தியாலும் மழுங்கடித்துவிட முடியாது. இவ்வாறு மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார். நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், விடுதலைப் போராட்டத்தை குழப்புவதற்கு இதுவரை காலமும் பல்வேறு தீய சக்திகள் முற்பட்டு வந்துள்ளன. ஆனால், இன்று எம்முன் இருந்த ஒருவரே பிரதேசவாதத்தைக் கிளப்பி விட்டு போராட்டத்தைக் களங்கப்படுத்த முனைந்துள்ளமை மக்கள் மத்தியில் பேரதிர்ச்சியை உருவாக்கியுள்ளது. கருணா என்ற தனி மனிதனின் துரோகத்தனமான செயலால் தமிழீழத்தின் போராட்ட வரலாற்றில் மட்டு. அம்பாறை மாவட்டம் ஒரு கறைபடிந்த மாவட்டமாக பதிவு செய்யப்பட்டு விடுமோ என்ற ஏக்கம் மட்டு. அம்பாறைவாழ் மக்களிடமும் போராளிகளிடமும் தலைதூக்கியுள்ளது.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் இத்தகைய அரசியல் குழப்பத்தை உருவாக்க முனைந்த கருணாவின் செயலை மட்டு. அம்பாறை மாவட்ட மக்களும் போராளிகளும் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை. தமிழினத்தின் ஒரே தலைவன் பிரபாகரனே என்பதில் அங்குள்ள அனைவரும் உறுதியாகவே உள்ளனர்.

எனவே, மட்டு. அம்பாறை மக்களோ போராளிகளோ எமது போராட்டத்திற்கு எதிரானவர்களாக மாறிவிடுவார்கள் என்ற அச்சம் எவருக்கும் தேவையில்லை எனக் கூறினார். (33, 27)

## தமிழர்...

மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள தமிழ் வாக்காளர்கள் இராணுவ முகாம்களுக்கு வெளிப்புறமாக உள்ள சூனியப்பிர தேசங்களில் கொத்தனி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு அங்கு சென்று வாக்களிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுப்பது தொடர்பான இணக்க நிலை காணப்பட்டாலும் வன்னி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் வாக்காளர்கள் சுதந்திரமாக வந்து வாக்களிக்கக் கூடியதான ஒழுங்குகளைச் செய்வது குறித்து ஒரு நிச்சயமற்ற நிலையே காணப்படுவதாக தாம் சூல்கெய்மிடம் தெரிவித்ததாக சம்பந்தன் தெரிவித் தார்.

வாக்களிப்பதற்கு வரும் தமிழ் வாக்காளர்களை சோதனை என்ற பெயரில் தடுத்து வைத்து தாமதமாக்குவதன் மூலம் வாக்களிப்பை தடைசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது என்றும் இதனைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ள உதவும்படியும் சம்பந்தன் சூல்கெய்மைக் கேட்டுக் கொண்டார். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழும் தமிழ் வாக்காளர்கள் சுதந்திரமாக, படையினரின் கெடுபிடிகளின்றி வாக்களிப்பதற்கான உரிமை மறுக்கப்படின் அது சமாதானப் பேச்சுவார்த்தையில் பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் என்றும் சம்பந்தன் கூறினார். இதுபற்றி தாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாக தெரிவித்த சிறப்புத் தூதர் சூல்கெய்ம், சுதந்திரமாக வந்து வாக்களிக்கக் கூடிய நிலை ஏற்படும் என்று தாம் நம்புவதாகப் பதிலளித்தார். (25)

## சூனிய...

ஆணையாளருக்கும், படைத் தளபதிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று தேர்தல் செயலகத்தில் நடைபெற்றது இதன்போது தேர்தல் ஆணையாளர் யுத்த சூனியப் பிரதேசத்தில் தேர்தல் வாக்களிப்பை நடத்துவது தொடர்பாக படைத்தளபதிகளின் கருத்தை வினாவினார் தெற்கு படைத்தளபதிகள் தமது இணக்கத்தை வெளியிடவில்லை யுத்தசூனிய பிரதேசத்தில் தேர்தல் வாக்களிப்பை நடத்தும் போது அங்கு காணப்படும் நிலக்கண்ணி வெடிகள்பாரிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும் எனவே அதற்கு தாம் உறுதிப்பாட்டை வழங்கமுடியாது என படைத் தளபதிகள் தெரிவித்தனர். இந்த நிலையில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் அமைந்துள்ள சோதனைச்சாவடிகளுக்கு அருகில் தேர்தல் வாக்கு சாவடிகளை அமைக்கும் யோசனையை தேர்தல் ஆணையாளரிடம் படைத்தளபதிகள் தெரிவித்தனர். இதுதொடர்பில் தமது கட்டளை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து 22ம் திகதி அறிக்கையை சமர்ப்பிப்பதாக உறுதியளித்தனர். இதேவேளை யாழ்ப்பாணத்தில் நெடுந்தீவு, மட்டக்களப்பில் சிலபிரதேசங்கள் என்பவற்றிற்கு வாக்குச்சீட்டுக்கள் மற்றும் வாக்குப்பெட்டிகளை எடுத்துச்செல்வதற்கு வான் படையினர் உதவியைப் பெற்றுக் கொள்ளவும் இந்தச்சந்திப்பில் இணக்கம் பெறப்பட்டது. (32)

## வெளிநாட்டின்..

லாளர்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

கிழக்கில் கருணா புதியதெருசர்ச்சையை உருவாக்க முயற்சித்த போது அவருடைய துரோகத்தனமான செயலுக்கு எம்மையும் துணையாக வருமாறு அழைத்தார் ஆனால் இதற்கு மறுப்புத் தெரிவித்த கிழக்கு மாகாணத் தளபதிகளும்,போராளிகளும் எமது போராட்டம் பிளவுபடக்கூடாது, பிரதேச வாதம் தலை தூக்க கூடாது என்பதில் உறுதியாக இருந்தோம்.

எனினும் சில தீயசத்திகளின் கைக்கூலியாக மாறிவிட்டிருந்த கருணா எமது கருத்துக்குச் செவி சாய்க்காது கிழக்கு மாகாண போராளிகளது தியாகங்களையும்,மாவீரர்களின் தற்கொடைகளையும் தனது துரோகத்தனமான செயலுக்குச் சாதகமாக்கி அங்குள்ள மக்களையும், போராளிகளையும் திசைதிருப்ப முனைகிறார். ஆனால் அவர்களோ தலைவரையும், விடுதலைப் போராட்டத்தின் தியாகங்களையும் மனதில் சுமந்து நிற்கின்றார்கள். ஆனால், கருணாவோ அவரது துரோகச் செயல்களை எதிர்க்கும் கிழக்குப் போராளிகளை தனது கட்டுப்பாட்டின்கீழ் முடக்கிவைத்திருக்கின்றார். தன்மீதுள்ள நிதி மோசடிகள், பாலியல்குற்றச்சாட்டுகள் உட்பட்ட துரோகத்தனங்களை மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள் புலிகளின் கொள்கைகளுக்குப் பங்கம் விளைவிக்கும் செயலை தலைவர் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார் இது புலிகளின் கொள்கைகளுக்குப்புறம்பான செயல் என்ற குற்ற உணர்வு அவர் மனதை உறுத்தியதன் காரணமாகவே இத்தகைய முடிவை அவர் எடுத்துள்ளார். எனினும் அவருக்கு எமது தலைவர் பொது மன்னிப்பு வழங்கியுள்ளமை தலைவரது பெருந்தன்மையையும், பேராண்மையையும் வெளிப்படுத்துகிறது.

ஆனால், கருணாவோ தமிழினத்தின் எதிரிகளுடன் தற்பொழுது கூட்டை ஏற்படுத்தியுள்ளார். அத்துடன் விடுதலைக்காக போராடத்துணிந்த போராளிகளையும் தளபதிகளையும் தவறான பாதையில் நடத்த முனைகிறார்.

எனினும் கிழக்கிலுள்ள புத்திஜீவிகளும், தளபதிகளும், மக்களும், போராளிகளும் அவரது இத்தேசவிரோதச் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கமுடியாத சூழ்நிலையில் அச்சுறுத்தல்களின் கீழ் வாழ்கின்றனர். ஆயினும் தமிழினத்தின் தனித் தலைவர் பிரபாகரன் மட்டுமே என்பதில் மக்களும், போராளிகளும் உறுதியாகவே உள்ளனர் தலைவர் மீது நாம் நல்ல நம்பிக்கை கொண்டுள்ளோம் அவர் அனைத்துப் போராளிகளையும், மக்களையும் சமமாகவே நேசிக்கிறார். எனவே மக்கள் இது குறித்துக் கலக்கமடையத் தேவையில்லை. தமிழ் மக்களுக்கு எந்தவோர் தீர்வும் தலைவரின் வழி நடத்தலில் பெறுவதற்கு புலிகள் தயாராக உள்ளனர். இக்குழப்பங்களுக்கும் தீர்வு தருவார் எனத் தெரிவித்தார். (33)

## போர்...

ஆனால் நிரந்தர சமாதானத்தை காண்பதற்கு உந்துதல் தேவைப்படுகிறது என குறிப்பிட்டார். தொழில் வாய்ப்பைப் பொறுத்தவரையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 50,000 பேருக்கு தொழில்களை வழங்கப் போவதாக கூறுகிறது. ஆனால் தொழில் வாய்ப்புகள் குறித்து அதில் எவ்வித யோசனைகளும் அந்த முன்னணியால் குறிப்பிடவில்லை. அமெரிக்காவுடன் ஒப்பந்தத்தை செய்து ஆடைத் தொழிற்துறையை மேம்படுத்தப் போவதாகவும் பிரதமர் கூறினார்.

இதேவேளை தேர்தல் விஞ்ஞாபனத்தில் நடைமுறைப் போர் நிறுத்தத்தை வலுப்படுத்தல், ஐக்கிய இலங்கைக்குள் சகல சமூகங்களுக்குமான தீர்வை உறுதி செய்தல்,ஒஸ்லோ மற்றும் ரோக்கியோ பிரகடனங்களின் படி காரியங்களை நிறைவேற்றல், அதிகாரப் பரவலாக்கம் மூலம் அனைத்து சமூகங்களின் உரிமைகளையும் உறுதிப்படுத்தல் , முஸ்லிம் சமூகத்தை தனித்தரப்பாக ஏற்றுக்கொண்டு தேர்தல் முடிவடைந்தபின் இயன்றளவு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தல், வடக்கு கிழக்கில் இடம் பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்துதல், வடக்கு கிழக்கின் அபிவிருத்தியில் விரைவை ஏற்படுத்துவது,

சமமான வளப்பங்கீட்டை உறுதிப்படுத்துவது, வடக்கு கிழக்குக்கு இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துதல் மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் எட்டப்படும் இறுதித் தீர்வை நடைமுறைப் படுத்த முன்னர் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துதல் என்பனவற்றுடன் 30 இலட்சம் தொழில்களை நாடளாவிய ரீதியில் உருவாக்கல், கல்வி மேம்பாடு ஆசிரிய சேவையில் அதிகமானோரை உள்ளீர்த்தல், பெண்களின் உரிமையைப் பாதுகாத்தல், பெருந்தோட்டத்தொழிலாளர்களின் உரிமைகளையும்அபிவிருத்தியையும் மேம்படுத்தல் என்பன குறிப்பிடப்பட்டுள்ளது. (32)

## நம்பிக்கைத்..

விடக்கூடாது. இந்த விடயத்தை இந்தப்பாடுமீன் வாசகர்களுக்கு அனுப்பும் வரைக்கும் என்னுயிர் பிரிந்துவிடக்கூடாது என்ற அச்சத்துடன் இருந்து என்கைவிரல்கள் அசைகின்றன.

என் அன்பான வாசகர்களே இப்பொழுது கருணா என்கின்ற அந்த அரக்கன் எமது தேசியத் தலைவரின் மூச்சுக்குப் பயந்து என்னருகில் இல்லாமல் வனாந்தரத்திற்குள் பதுங்கி இருக்கச் சென்றுவிட்டார். அதனால்த்தான் இக்கருத்தை உங்கள் கண்ணில் பார்க்கக்கூடிய அளவுக்கு என்னால் அனுப்ப முடிந்தது.

தற்போது தமிழ் மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிந்திருப்பது பூதாகரமான 'பிரதேசவாதக் கொள்கை' மட்டுமே. இதனுள் பொதிந்திருக்கும் உண்மைத் தன்மையோ வேறு. இது தனிப்பட்ட மனிதன் கருணாவினுடைய பிரச்சினை. இங்கு தனிப்பட்ட மனிதன் கருணா என்று சொல்வது தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து எமது தலைமையகம் கருணாவை நீக்கியுள்ளது என்றமையாலாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டு விதிகளுக்கு புறம்பாக சில செயல்களை கருணா செய்துள்ளார். கருணா தனித்தே இந்த முடிவையும் எடுத்துள்ளார். அவற்றை மூடி மறைக்க தற்போதுள்ள சமாதானச் சூழ்நிலையைத் தனக்கு சாதகமாகப்பயன்படுத்தி பிரதேசவாதக் கொள்கையை முன்வைத்து தனித்துச் செயற்பட முன்வந்துள்ளார். இதுவே உண்மை நிலையாகும். எனக்குத் தெரிந்த வகையில் கருணா தனது பிரச்சினைகளை மூடிமறைக்க அப்பாவியான மட்டு அம்பாறை மக்களையும் போராளிகளையும் பயன்படுத்தி வருகின்றார். சமீபகாலங்களில் புதிதாக பயிற்சி பெற்ற போராளிகளுக்கு சாடைமாடையாக பிரதேச வாதக்கொள்கைகளை புகுத்தி வந்துள்ளார். அக்கருத்தை அவர்களுக்கு புகட்ட போராளிகளினது தியாகங்களையும், அர்ப்பணிப்புக்களையும் சொல்லி தனது கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வைத்திருக்கின்றார். புதிய போராளிகள் சிலர் உருக்கமான கருத்துக்களால் எடுபட்டுவிட்டார்கள்.

பின்னர் துரோகி கருணா ஏற்படுத்திய போராளிகள் சந்திப்பில் வடபகுதியிலுள்ள பொறுப்பாளர்களைப் பற்றி தவறான செய்திகளை பரப்பி வந்துள்ளார். கருணாவினுடைய இச்செயலானது தனித்தே எடுக்கப்பட்டது. தனக்கு கீழிருந்த தளபதிகள், போராளிகளது கருத்துக்களையோ அல்லது விருப்பங்களையோ கேட்கவில்லை என்பதும் உண்மை.

போராளிகளாகிய நாங்கள் தலைவர் அண்ணாவினுடைய வழிகாட்டலுக்கு அமையவே செயற்பட விரும்புகின்றோம். நாங்கள் தமிழீழத்திற்காக உயிர் துறக்கவும் தயாராகவிருக்கின்றோம். எமக்கு ஒரு சிறந்த தலைவர் கிடைத்துள்ளார். இதை உலகமே அறிந்த விடயம். தலைவர் அண்ணாவினுடைய இக்காலத்திலேயே தமிழீழத்தை வென்றெடுக்க வேண்டும் என்பதே எனது அவா (இங்கு அண்ணா எனக்குறிப்பிடுவது தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களையே). ஒருவன் தனது சொந்த ஊரில் பற்றுக்கொண்டவன்தான் தனது நாட்டின் மீதும் பற்றுக்கொள்ளுவான். 17 ஆயிரம் மாவீரர்களது கனவை நனவாக்க தலைவர் அண்ணாவினுடைய வழிகாட்டலில் என்றும் செயற்படுவோம். அந்த வகையில் தமிழீழத்திற்காக எனது உயிரைத்துறப்பதில் எந்தவித கவலையும் அடையவில்லை. ஆனால் இந்த பிரச்சினையைத் எமது தலைமை இலகுவாக தீர்க்கும் என்ற நம்பிக்கையுண்டு. மிக நெருக்கடியான கால கட்டங்களில்கூட ஏற்பட்ட சிக்கல்களை இலகுவாகக் கையாண்ட தலைமை இதையும் கையாளுமென நினைக்கின்றேன். இதை தமிழ் மக்கள் நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதையும் இதனூடாகத் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன். இதுதான் எனது கடைசி எழுத்தாக இருக்குமோ தெரியாது. எனது சாவு தேசத்தின் விடுதலைக்காகவே இறந்தனான் என்று இந்த மண் ஏற்றுக் கொள்ளுமா என்றுகூடத்தெரியவில்லை ???. ஏனெனில் கருணாவிற்கு பிடித்திருக்கும் பைத்தியத்திற்கு நானும் பலியாகிவிடுவேனோ என்று தெரியவில்லை)

தமிழீழத்தில் வடுவொன்றை ஏற்படுத்திய நம்பிக்கைத்துரோகி கருணாவை இந்த மண் ஒரு போதும் மன்னியாது என்று நினைக்கின்றேன்.

***இதுவரை காலமும் பாடுமீனுக் காக செய்திகளை அனுப்பியவன்.***

*(போராளி)*


## கணக்காளர் தேவை

தினமும் மாலை ஒரு மணி நேரம் கடமை புரியக்கூடிய அனுபவம் வாய்ந்த கணக்காளர் தேவை. அகவை 40-50 உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. தகுதியுடையோர் நேரில் சமூகம் தரவும்

புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி

குறிப்பு: சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

(சி-9274)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.